LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | June 2021
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Lords. M. PAUL RAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS

LORDS CLUBS INTERNATIONAL

# LORDS TODAY



BHAGAVAD GITA

BIBLE



KURAN

2021- 16796675756

# தலையங்கம்...

## உலக மக்களின் மூன்று மதம் வேத நூல்கள்

### தொடர் 5




**BHAGAVAD GITA-Tamil**
6 Page's
தொடரும்.....




**BIBLE Tamil**
6 Page's
தொடரும்.....

**KURAN Tamil**
6 Page's
தொடரும்.....

LORDS CLUBS INTERNATIONAL

உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக உலக மக்கள் நலன்கருதி உலகிலேயே முதல்முறையாக உலகத்தரம் வாய்ந்த 3 மதம் வேதநூல் மெகாத்தொடர் ஒவ்வொரு மாதமும் பகவத் கீதை ஆறு பக்கங்களும் பைபிள் ஆறு பக்கங்களும் குரான் ஆறு பக்கங்களும் ஆக மொத்தம் 18 பக்கங்கள் இனி மாதம் தோரும் தவறாமல் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வெளிவரும் என்று அனைத்து வாசகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முற்றிலுமாகப் படித்து முடித்த இந்த 3மத வேதநூல்களையும் பொதுமக்கள் அனைவரும் பக்த்தியுடன் படித்து ஊழல் பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களும் செய்யாமல் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் வேண்டுகோள் வைக்கின்றேன். இனி நல்லதை படித்து நல்லதை படைத்து, இவ்வுலக மக்களுக்கு நல்லதையே செய்து பொதுமக்களின் அனவைருடைய பொருளாதாரத்தையும் உயர்திடுவோம். அன்புடன் உங்கள்,

லார்ட்ஸ் மபால்ராஜ்

**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner
**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com

# மெகா தொடர் PART - 5






சிறுமையாகிய குறையால் இயல்பு அழிந்த
னாய், அறம் இன்னது என்றுணராமல் மயங்கிய
அறிவுடன், யான் உன்னைக் கேட்கிறேன். எது
நன்றென்பதை எனக்கு நிச்சயப் படுத்திச்
சொல்லுக, நான் உன் சிடன். உன்னையே சரண
மெனப் புகுந்தேன். கட்டளை தருக. 7

**न हि प्रपश्यामि ममापनुद्याद्**
**यच्छोकमुच्छोषणमिन्द्रियाणाम् ।**
**अवाप्य भूमावसपत्नमृद्धं**
**राज्यं सुराणामपि चाधिपत्यम् ॥ ८॥**

பூமியின்மேல் நிகரில்லாத செல்வமுடைய
ராஜ்யம் பெறினும், அன்றி வானோர்மிசை
ஆட்சி பெறினும் புலன்களை யடர்க்கும் இயல்
புடைய இந்தத் துயர் எம்மை விட்டு நீங்கு
மென்று தோன்றவில்லை. 8






सञ्जय उवाच—

एवमुक्त्वा हृषीकेशं
गुडाकेशः परन्तपः।
न योत्स्य इति गोविन्द-
मुक्त्वा तूष्णीं बभूव ह ॥ ९॥

ஸஞ்ஜயன் சொல்லுகிறான்—

பகைவரைக் கொளுத்தும் பார்த்தனங்கு
பசு நிரை காக்கும் பகவனை நோக்கிப்
"போ ரினிப் புரியேன்" என்று
வாய் புதைத்திருந்தான். 9

तमुवाच हृषीकेशः प्रहसन्निव भारत।
सेनयोरुभयोर्मध्ये विषीदन्तमिदं वचः ॥ १०॥

பாரதா, அப்போது கண்ணன் புன்னகை பூத்து, இரண்டு படைகளுக்கும் நடுவே துயருற்று நின்ற பார்த்தனை நோக்கி இவ்வசன முரைக்கிறான் :— 10






श्रीभगवानुवाच—

अशोच्यानन्वशोचस्त्वं
प्रज्ञावादांश्च भाषसे ।
गतासूनगतासूंश्च
नानुशोचन्ति पण्डिताः ॥ ११ ॥

ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்—

துயர்ப் படத் தகாதார் பொருட்டுத்
துயர்ப் படுகின்றாய்.
ஞான வுரைகளு முரைக்கிறாய்!
இறந்தார்க் கேனும் இருந்தார்க் கேனுந்
துயர் கொளார் அறிஞர். 11

न त्वेवाहं जातु नासं न त्वं नेमे जनाधिपाः ।
न चैव न भविष्यामः सर्वे वयमतः परम् ॥ १२ ॥

இதன் முன் எக்காலத்திலும் நான் இல்லா
திருந்திலேன். நீயும் இங்குள்ள வேந்தர் யாவ
ரும் அப்படியே. இனி நாம் என்றைக்கும் இல்
லாமற் போகவும் மாட்டோம். 12






देहिनोऽस्मिन्यथा देहे कौमारं यौवनं जरा ।
तथा देहान्तरप्राप्तिर्धीरस्तत्र न मुह्यति ॥ १३ ॥

ஆத்மாவுக்கு இவ்வுடலில் எங்ஙனம் பிள்ளைப் பிராயமும், இளமையும், மூப்புந் தோன்றுகின்றனவோ, அங்ஙனமே மற்றொரு சரீரப் பிறப்புந் தோன்றுகிறது. தீரன் அதில் கலங்கமாட்டான்.

मात्रास्पर्शास्तु कौन्तेय शीतोष्णसुखदुःखदाः ।
आगमापायिनोऽनित्यास्तांस्तितिक्षस्व भारत ॥

குந்தியின் மகனே, குளிரையும் வெப்பத்தை
யும், இன்பத்தையும் துன்பத்தையுந் தரும்
இயற்கையின் தீண்டுதல்கள் தோன்றி மறை
யும் இயல்புடையன, என்று மிருப்பனவல்ல.
பாரதா, அவற்றைப் பொறுத்துக்கொள். 14

यं हि न व्यथयन्त्येते पुरुषं पुरुषर्षभ ।
समदुःखसुखं धीरं सोऽमृतत्वाय कल्पते ॥ १५ ॥

யாவன் இவற்றால் துயர்ப் படான், இன்ப
முந் துன்பமு நிகரெனக் கொள்வான், அந்த
தீரன், சாகா திருக்கத் தகுவான். 15




नासतो विद्यते भावो नाभावो विद्यते सतः ।
उभयोरपि दृष्टोऽन्तस्त्वनयोस्तत्त्वदर्शिभिः ॥

இல்லாதது உண்மை யாகாது. உள்ளது இல்
லாத தாகாது. உண்மை யறிவார் இவ் விரண்
டிக்கு முள்ள வேற்றுமை யுணர்வார். 16

अविनाशि तु तद्विद्धि येन सर्वमिदं ततम् ।
विनाशमव्ययस्यास्य न कश्चित्कर्तुमर्हति ॥ १७॥

இவ்வுலக முழுதிலும் பரந்து நிற்கும் பொருள்
அழிவற்றதென்றறி; இது கேடற்றது; இதனை
யழித்தல் யார்க்கும் இயலாது. 17

अन्तवन्त इमे देहा नित्यस्योक्ताः शरीरिणः ।
अनाशिनोऽप्रमेयस्य तस्माद्युध्यस्व भारत ॥१८॥

ஆத்மா சாதன்; அழிவற்றான்; அளவிடத்
தகாதான். எனினும் அவனுடைய வடிவங்கள்
இறுதியுடையன என்பர். ஆதலால், பாரதா,
போர் செய். 18






य एनं वेत्ति हन्तारं
यश्चैनं मन्यते हतम् ।
उभौ तौ न विजानीतो
नायं हन्ति न हन्यते ॥ १९ ॥

இவன் கொல்வா னென்று நினைப்போனும், கொல்லப் படுவானென்று நினைப்போனும்— இருவரும் அறியாதார். இவன் கொல்வது மில்லை, கொலை யுண்பது மில்லை. 19

न जायते म्रियते वा कदाचि-
न्नायं भूत्वा भविता वा न भूयः ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो
न हन्यते हन्यमाने शरीरे ॥ २० ॥

இவன் பிறப்பது மில்லை; எக்காலத்திலும் இறப்பது மில்லை. இவன் ஒரு முறையிருந்து பின்னர் இல்லாது போவது மில்லை. இவன் பிறப்பற்றான்; அனவரதன். இவன் சாசுவதன்; பழையோன்; உடம்பு கொல்லப் படுகையில் இவன் கொல்லப் படான். 20

தொடரும்.....

# BIBLE

## மெகா தொடர்
## PART - 5

## தொடக்கநூல் அதிகாரம் – 10 – திருவிவிலியம்

**நோவா புதல்வரின் வழிமரபினர்**

**(1 குறி 1:5-23)**

1 நோவாவின் புதல்வர் சேம், காம், எப்பேத்து ஆகியோரின் வழிமரபினர் இவர்களே. வெள்ளப் பெருக்குக்குப்பின் அவர்களுக்குப் புதல்வர் பிறந்தனர்.

2 எப்பேத்தின் புதல்வர்: கோமேர், மாகோகு, மாதாய், யாவான், தூபால், மெசேக்கு, தீராசு.

3 கோமேரின் புதல்வர்: அஸ்கனாசு, இரிபாத்து, தோகர்மா.

4 யாவானின் புதல்வர்: எலிசா, தர்சீசு, கித்திம், தோதானிம்.

5 இவர்கள் வழிவந்த கடற்கரை நாட்டினர் மொழி, குடும்ப, இனவாரியாகப் பிரிந்து தம் நாடுகளில் பரவினர்.

6 காமின் புதல்வர்; கூசு, எகிப்து, பூற்று, கானான்.

7 கூசின் புதல்வர்; செபா, அவிலா, சப்தா, இராமா, சப்தக்கா. இராமாவின் புதல்வர்; சேபா, தெதான்.

8 மேலும் கூசுக்கு நிம்ரோது பிறந்தான். இவன்தான் முதன்முதலாக உலகத்தில் பேராற்றல் கொண்டவனாக விளங்கியவன்.

9 ஆண்டவர் திருமுன் இவன் ஆற்றல்மிக்க வேடனாக இருந்தான். இதனால் ஆண்டவர் திருமுன் நிம்ரோதைப் போன்ற ஆற்றல்மிக்க வேடன் என்ற வழக்கு ஏற்படலாயிற்று.

10 முதன்முதலில் சினயார் நாட்டிலிருந்த பாபேல், எரேக்கு, அக்காது, கல்னே ஆகியவை அவன் ஆட்சிக்குள் வந்தன.

11 அந்நாட்டிலிருந்து அசீரியா நாட்டுக்குச் சென்று, அங்கே நினிவே, இரகபோத்து, ஈர், காலாகு ஆகிய நகரங்களை அமைத்தான்.

12 நினிவேக்கும் காலாகிற்கும் இடையே மிகப்பெரிய நகரமாகிய

# BIBLE




இரசேனை அவன் நிறுவினான்.

13 எகிப்தின் புதல்வர்; லூதிம், அனாமிம், இலகாபிம், நப்துகிம்,

14 பத்ருசிம், பெலிஸ்தியரின் மூதாதையரான கஸ்லுகிம், கப்தோரிம்.

15 கானானின் தலைமகன் சீதோன், ஏனைய புதல்வர்; ஏத்து,

16 எபுசி, எமோரி, கிர்காசி, 17இவ்வி, அற்கி, சீனி,

18 அர்வாது, செமாரி, அமாத்தி. இந்தக் கானானின் குடும்பங்கள் பின்னர் பிரிந்து பரவலாயின.

19 கானானியர் நாட்டு எல்லை சீதோனிலிருந்து தெற்கே கெரார் செல்லும் திசையில் காஸாவரையும் கிழக்கில் சோதோம், கொமோரா, அத்மா, செபோயிம் செல்லும் திசையில் இலாசா வரையும் பரவியிருந்தது.

20 இவை காம் புதல்வரின் குடும்ப, மொழி, நாடு, இனவாரியான பிரிவுகள்.

21 எப்பேத்தின் மூத்த சகோதரன் சேமுக்குப் புதல்வர் பிறந்தனர். சேம் ஏபேரியரின் முதுபெருந்தந்தை.

22 சேமின் ஏனைய புதல்வர்: ஏலாம், அசீரியா, அர்பகசாது, லூது, ஆராம்.

23 ஆராமின் புதல்வர்: ஊசு, ஊல், கெத்தெர், மாசு.

24 அர்பகசாதுக்குச் செலாகு பிறந்தான். செலாகிற்கு ஏபேர் பிறந்தான்.

25 ஏபேருக்கு புதல்வர் இருவர் பிறந்தனர்; ஒருவனின் பெயர் பெலேக்கு. ஏனெனில், அவன் காலத்தில்தான் உலக மக்கள் பிரிந்தனர். அவன் சகோதரனின் பெயர் யோக்தான்.

26 யோக்தானின் புதல்வர்; அல்மோதாது, செலேபு, அட்சர்மாவேத்து, எராகு,

27 அதோராம், ஊசால், திக்லா,

28 ஓபால், அபிமாவேல், சேபா,

29 ஓபீர், அவிலா, யோபாபு.

# BIBLE

30 அவர்கள் வாழ்ந்த நாடு மேசாவிலிருந்து கிழக்கே செப்பார் செல்லும் திசையில் இருந்த மலைநாடுவரை பரவியிருந்தது.

31 இவை சேம் புதல்வரின் குடும்ப, மொழி, நாட்டு, இனவாரியான பிரிவுகள்.

32 இவை நோவா புதல்வரின் வழிவந்த குடும்பங்களின் இனவாரியான தலைமுறைகள். இவர்கள் வழிவந்த மக்களினங்களே வெள்ளப் பெருக்கிற்குப் பின் உலகின் எல்லா நாடுகளிலும் பரவின.

## தொடக்கநூல் அதிகாரம் – 11 – திருவிவிலியம்

பாபேல் கோபுரம்

1 அப்பொழுது உலகம் முழுவதிலும் ஒரே மொழியும் ஒரே விதமான சொற்களும் இருந்தன.

2 மக்கள் கிழக்கிலிருந்து புறப்பட்டு வந்து சினயார் நாட்டில் சமவெளி ஒன்றைக் கண்டு, அங்கே குடியேறினர்.

3 அப்பொழுது அவர்கள், ஒருவரை ஒருவர் நோக்கி, வாருங்கள், நாம் செங்கற்கள் அறுத்து அவற்றை நன்றாகச் சுடுவோம் என்றனர். அவர்கள் செங்கல்லைக் கல்லாகவும் கீலைக் காரையாகவும் பயன்படுத்தினர்.

4 பின், அவர்கள் வாருங்கள், உலகம் முழுவதும் நாம் சிதறுண்டு போகாதபடி வானளாவிய கோபுரம் கொண்ட நகர் ஒன்றை நமக்காகக் கட்டி எழுப்பி, நமது பெயரை நிலை நாட்டுவோம் என்றனர்.

5 மானிடர் கட்டிக்கொண்டிருந்த நகரையும் கோபுரத்தையும் காண்பதற்கு ஆண்டவர் கீழே இறங்கி வந்தார்.

# BIBLE




6 அப்பொழுது ஆண்டவர், இதோ! மக்கள் ஒன்றாக இருக்கின்றனர்.
அவர்கள் எல்லோரும் ஒரே மொழி பேசுகின்றனர். அவர்கள்
செய்யவிருப்பதன் தொடக்கமே இது! அவர்கள் திட்டமிட்டுச்
செய்யவிருப்பது எதையும் இனித்தடுத்து நிறுத்த முடியாது.

7 வாருங்கள், நாம் கீழே போய் அங்கே ஒருவர் மற்றவரின் பேச்சைப்
புரிந்து கொள்ள முடியாதபடி, அவர்கள் மொழியில் குழப்பத்தை
உண்டாக்குவோம் என்றார்.

8 ஆண்டவர் அவர்களை அங்கிருந்து உலகம் முழுவதிலும்
சிதறுண்டுபோகச் செய்ததால் அவர்கள் நகரைத் தொடர்ந்து
கட்டுவதைக் கைவிட்டனர்.

9 ஆகவே, அது பாபேல் என்று வழங்கப்பட்டது. ஏனெனில், அங்கே
ஆண்டவர் உலகெங்கும் வழங்கி வந்த மொழியில் குழப்பத்தை
உண்டாக்கினார். அங்கிருந்து அவர்களை ஆண்டவர் உலகம்
முழுவதிலும் சிதறுண்டு போகச் செய்தார். சேமின் வழிமரபினர்

(1 குறி 1:24-27)

10 சேமின் தலைமுறைகள் இவையே; வெள்ளப் பெருக்கிற்கு இரண்டு
ஆண்டுகளுக்குப்பின் சேம் நூறு வயதாக இருந்தபொழுது
அவனுக்கு அர்பகசாது பிறந்தான்.

11 அர்பகசாது பிறந்தபின் சேம் ஐந்நூறு ஆண்டுகள் வாழ்ந்தான்.
அப்பொழுது சேமுக்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.

12 அர்பகசாது முப்பத்தைந்து வயதாக இருந்தபொழுது அவனுக்குச்
செலாகு பிறந்தான்.

13 செலாகு பிறந்த பின் அர்பகசாது நானூற்று மூன்று ஆண்டுகள்
வாழ்ந்தான். அப்பொழுது அர்பகசாதுக்குப் புதல்வரும் புதல்வியரும்
பிறந்தனர்.

14 செலாகு முப்பது வயதாக இருந்தபொழுது அவனுக்கு ஏபேர்
பிறந்தான்.

# BIBLE

15 ஏபேர் பிறந்தபின் செலாகு நானூற்று மூன்று ஆண்டுகள் வாழ்ந்தான்.
அப்பொழுது செலாகிற்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.
16 ஏபேர் முப்பத்து நான்கு வயதாக இருந்தபொழுது அவனுக்குப்
பெலேகு பிறந்தான்.
17 பெலேகு பிறந்தபின் ஏபேர் நானூற்று முப்பது ஆண்டுகள் வாழ்ந்தான்.
அப்பொழுது ஏபேருக்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.
18 பெலேகு முப்பது வயதாக இருந்தபொழுது அவனுக்கு இரயு
பிறந்தான்.
19 இரயு பிறந்தபின் பெலேகு இருநூற்று ஒன்பது ஆண்டுகள்
வாழ்ந்தான். அப்பொழுது பெலேகிற்குப் புதல்வரும் புதல்வியரும்
பிறந்தனர்.
20 இரயு முப்பத்திரண்டு வயதாக இருந்தபொழுது அவனுக்குச் செரூகு
பிறந்தான்.
21 செரூகு பிறந்தபின் இரயு இருநூற்று ஏழு ஆண்டுகள் வாழ்ந்தான்.
அப்பொழுது இரயுவுக்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.
22 செரூகு முப்பது வயதாக இருந்தபொழுது அவனுக்கு நாகோர்
பிறந்தான்.
23 நாகோர் பிறந்தபின் செரூகு இருநூறு ஆண்டுகள் வாழ்ந்தான்.
அப்பொழுது செரூகுக்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.
24 நாகோர் இருபத்தொன்பது வயதாக இருந்தபொழுது அவனுக்குத்
தெராகு பிறந்தான்.
25 தெராகு பிறந்தபின் நாகோர் நூற்றுப்பத்தொன்பது ஆண்டுகள்
வாழ்ந்தான். அப்பொழுது நாகோருக்குப் புதல்வரும் புதல்வியரும்
பிறந்தனர்.
26 தெராகு எழுபது வயதாக இருந்தபொழுது அவனுக்கு ஆபிராம்,
நாகோர், ஆரான் ஆகியோர் பிறந்தனர். தெராகின் வழிமரபினர்

# BIBLE




27 தெராகின் தலைமுறைகள் இவையே; தெராகிற்கு ஆபிராம், நாகோர், ஆரான் ஆகியோர் பிறந்தனர். ஆரானுக்கு லோத்து பிறந்தான்.

28 ஆரான் தான் பிறந்த நாட்டில் ஊர் என்ற கல்தேயர் நகரில் தன் தந்தை தெராகிற்கு முன்பே இறந்தான்.

29 ஆபிராமும், நாகோரும் பெண் கொண்டனர். ஆபிராமின் மனைவி பெயர் சாராய். நாகோரின் மனைவி பெயர் மில்கா. மில்கா ஆரானின் மகள். மில்கா, இசுக்கா ஆகியோரின் தந்தை ஆரான்.

30 சாராய் குழந்தைப்பேறு இல்லாமல் மலடியாய் இருந்தார்.

31 தெராகு தம் மகன் ஆபிராமையும், தம் மகன் ஆரானின் புதல்வன் லோத்தையும், தம் மருமகளும் தம் மகன் ஆபிராமின் மனைவியுமான சாராயையும் அழைத்துக் கொண்டு ஊர் என்ற கல்தேயர் நகரை விட்டுக் கானான் நாட்டை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். காரான் என்ற இடத்திற்கு வந்ததும் அங்கேயே அவர்கள் தங்கி வாழலாயினர்.

32 தெராகு இருநூற்று ஐந்து வயதாக இருந்தபொழுது காரானில் இறந்தார்.

தொடரும்.....

# KURAN

## மெகா தொடர்
## PART - 5




2:88. இன்னும், அவர்கள் (யூதர்கள்) "எங்களுடைய இதயங்கள் திரையிடப்பட்டுள்ளன" என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்களுடைய (குஃப்ரு என்னும்) நிராகரிப்பின் காரணத்தால், அல்லாஹ் அவர்களைச் சபித்து விட்டான். ஆகவே, அவர்கள் சொற்பமாகவே ஈமான் கொள்வார்கள்.

2:89 وَلَمَّا جَاءَهُمْ كِتَابٌ مِنْ عِنْدِ اللَّهِ مُصَدِّقٌ لِمَا مَعَهُمْ وَكَانُوا مِنْ قَبْلُ يَسْتَفْتِحُونَ عَلَى الَّذِينَ
كَفَرُوا فَلَمَّا جَاءَهُمْ مَا عَرَفُوا كَفَرُوا بِهِ فَلَعْنَةُ اللَّهِ عَلَى الْكَافِرِينَ

2:89. அவர்களிடம் இருக்கக்கூடிய வேதத்தை மெய்ப்படுத்தக்கூடிய (இந்த குர்ஆன் என்ற) வேதம் அவர்களிடம் வந்தது; இந்த குர்ஆன் வருவதற்கு முன் காஃபிர்களை வெற்றி கொள்வதற்காக (இந்த குர்ஆன் மூலமே அல்லாஹ்விடம்) வேண்டிக்கொண்டிருந்தார்கள். (இவ்வாறு முன்பே) அவர்கள் அறிந்து வைத்திருந்த(வேதமான)து அவர்களிடம் வந்த போது, அதை நிராகரிக்கின்றார்கள் இப்படி நிராகரிப்போர் மீது அல்லாஹ்வின் சாபம் இருக்கிறது!

2:90 بِئْسَمَا اشْتَرَوْا بِهِ أَنْفُسَهُمْ أَنْ يَكْفُرُوا بِمَا أَنْزَلَ اللَّهُ بَغْيًا أَنْ يُنَزِّلَ اللَّهُ مِنْ فَضْلِهِ عَلَى مَنْ يَشَاءُ
مِنْ عِبَادِهِ فَبَاءُوا بِغَضَبٍ عَلَى غَضَبٍ وَلِلْكَافِرِينَ عَذَابٌ مُهِينٌ

2:90. தன் அடியார்களில் தான் நாடியவர் மீது தன் அருட்கொடையை அல்லாஹ் அருளியதற்காக பொறாமைப்பட்டு, அல்லாஹ் அருளியதையே நிராகரித்து தங்கள் ஆத்மாக்களை விற்று அவர்கள் பெற்றுக் கொண்டது மிகவும் கெட்டதாகும். இதனால் அவர்கள் (இறைவனுடைய) கோபத்திற்கு மேல்




கோபத்திற்கு ஆளாகி விட்டார்கள். (இத்தகைய) காஃபிர்களுக்கு இழிவான வேதனை உண்டு.

2:91 وَإِذَا قِيلَ لَهُمْ آمِنُوا بِمَا أَنزَلَ اللَّهُ قَالُوا نُؤْمِنُ بِمَا أُنزِلَ عَلَيْنَا وَيَكْفُرُونَ بِمَا وَرَاءَهُ وَهُوَ الْحَقُّ مُصَدِّقًا لِّمَا مَعَهُمْ
قُلْ فَلِمَ تَقْتُلُونَ أَنبِيَاءَ اللَّهِ مِن قَبْلُ إِن كُنتُم مُّؤْمِنِينَ

2:91. "அல்லாஹ் இறக்கி வைத்த (திருக்குர்ஆன் மீது) ஈமான் கொள்ளுங்கள்" என்று அவர்களுக்கு சொல்லப்பட்டால், "எங்கள் மீது இறக்கப்பட்டதன் மீதுதான் நம்பிக்கை கொள்வோம்" என்று கூறுகிறார்கள் அதற்கு பின்னால் உள்ளவற்றை நிராகரிக்கிறார்கள். ஆனால் இதுவோ(குர்ஆன்) அவர்களிடம் இருப்பதை உண்மைப் படுத்துகிறது. "நீங்கள் உண்மை விசுவாசிகளாக இருந்தால், ஏன் அல்லாஹ்வின் முந்திய நபிமார்களை நீங்கள் கொலை செய்தீர்கள்?" என்று அவர்களிடம் (நபியே!) நீர் கேட்பீராக.

2:92 وَلَقَدْ جَاءَكُم مُّوسَىٰ بِالْبَيِّنَاتِ ثُمَّ اتَّخَذْتُمُ الْعِجْلَ مِن بَعْدِهِ وَأَنتُمْ ظَالِمُونَ

2:92. நிச்சயமாக மூஸா உங்களிடம் தெளிவான அத்தாட்சிகளைத் கொண்டு வந்தார்; (அப்படியிருந்தும்) அதன்பின் காளை மாட்டை (இணை வைத்து) வணங்கினீர்கள்; (இப்படிச் செய்து) நீங்கள் அக்கிரமக்காரர்களாகி விட்டீர்கள்.

2:93 وَإِذْ أَخَذْنَا مِيثَاقَكُمْ وَرَفَعْنَا فَوْقَكُمُ الطُّورَ خُذُوا مَا آتَيْنَاكُم بِقُوَّةٍ وَاسْمَعُوا ۖ قَالُوا
سَمِعْنَا وَعَصَيْنَا وَأُشْرِبُوا فِي قُلُوبِهِمُ الْعِجْلَ بِكُفْرِهِمْ ۚ قُلْ بِئْسَمَا يَأْمُرُكُم بِهِ إِيمَانُكُمْ إِن كُنتُم
مُّؤْمِنِينَ

2:93. தூர் மலையை உங்கள் மேல் உயர்த்தி நாம் உங்களுக்குக் கொடுத்த (தவ்ராத்)தை உறுதியுடன் பற்றிக் கொள்ளுங்கள்; அதை செவியேற்றுக்கொள்ளுங்கள் என்று உங்களிடம் நாம்



வாக்குறுதி வாங்கினோம். (அதற்கு அவர்கள்) நாங்கள் செவியேற்றோம்; மேலும்(அதற்கு) மாறு செய்தோம் என்று கூறினார்கள். மேலும் அவர்கள் நிராகரித்த காரணத்தினால் அவர்கள் இதயங்களில் காளைக்கன்றின் (பக்தி) புகட்டப்பட்டது. நீங்கள் முஃமின்களாக இருந்தால் உங்களுடைய ஈமான் எதை கட்டளையிடுகிறதோ அது மிகவும் கெட்டது என்று (நபியே!) நீர் கூறும்.

2:94 قُلْ إِن كَانَتْ لَكُمُ الدَّارُ الْآخِرَةُ عِندَ اللَّهِ خَالِصَةً مِّن دُونِ النَّاسِ فَتَمَنَّوُا الْمَوْتَ إِن كُنتُمْ صَادِقِينَ

2:94. (நபியே!) "இறைவனிடத்தில் உள்ள மறுமையின் வீடு (சுவர்க்கம்) உங்களுக்கே சொந்தமானது; வேறு மனிதர்களுக்கு கிடையாது என்று உரிமை கொண்டாடுவதில் நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், (அதைப் பெறுவதற்காக) மரணத்தை விரும்புங்கள்" என்று (நபியே!) நீர் சொல்வீராக.

2:95 وَاللَّهُ عَلِيمٌ بِالظَّالِمِينَ لَن يَتَمَنَّوْهُ أَبَدًا بِمَا قَدَّمَتْ أَيْدِيهِمْ

2:95. ஆனால், அவர்கள் கரங்கள் செய்த (பாவங்களை) அவர்கள் முன்னமேயே அனுப்பி வைத்திருந்த காரணத்தால் அவர்கள் மரணத்தை விரும்பவே மாட்டார்கள்; நிச்சயமாக அல்லாஹ் அந்த அக்கிரமக்காரர்களை நன்கு அறிந்தவனாகவே இருக்கிறான்.

2:96 وَلَتَجِدَنَّهُمْ أَحْرَصَ النَّاسِ عَلَىٰ حَيَاةٍ وَمِنَ الَّذِينَ أَشْرَكُوا ٥٥ يَوَدُّ أَحَدُهُمْ لَوْ ٥٥
يُعَمَّرُ أَلْفَ سَنَةٍ وَمَا هُوَ بِمُزَحْزِحِهِ مِنَ الْعَذَابِ أَن يُعَمَّرَ ٥ وَاللَّهُ بَصِيرٌ بِمَا يَعْمَلُونَ □

2:96. அவர்கள், மற்ற மனிதர்களைவிட, இணை வைக்கும் முஷ்ரிக்குகளையும் விட (இவ்வுலக)

Activate Windows




வாழ்க்கையில் பேராசை உடையவர்களாக இருப்பதை (நபியே!) நீர் நிச்சயமாகக் காண்பீர்; அவர்களில் ஒவ்வொருவரும் ஆயிரம் ஆண்டுகள் வாழவேண்டும் என ஆசைப்படுகிறார்கள்; ஆனால் அப்படி அவர்களுக்கு நீண்ட வயது கொடுக்கப்பட்டாலும், அவர்கள் இறைவனின் தண்டனையிலிருந்து தப்ப முடியாது; இன்னும் அல்லாஹ் அவர்கள் செய்வதையெல்லாம் கூர்ந்து பார்ப்பவனாகவே இருக்கிறான்.

Play CopyWordByWord2:97

2:97 قُلْ مَنْ كَانَ عَدُوًّا لِّجِبْرِيلَ فَإِنَّهُ نَزَّلَهُ عَلَىٰ قَلْبِكَ بِإِذْنِ اللَّهِ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ وَهُدًى
وَبُشْرَىٰ لِلْمُؤْمِنِينَ

2:97. யார் ஜிப்ரீலுக்கு விரோதியாக இருக்கின்றானோ (அவன் அல்லாஹ்வுக்கும் விரோதியாவான்) என்று (நபியே!) நீர் கூறும்; நிச்சயமாக அவர்தாம் அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்கி உம் இதயத்தில் (குர்ஆனை) இறக்கி வைக்கிறார்; அது, தனக்கு முன்னிருந்த வேதங்கள் உண்மை என உறுதிப்படுத்துகிறது; இன்னும் அது வழிகாட்டியாகவும், நம்பிக்கை கொண்டோருக்கு நன்மாராயமாகவும் இருக்கிறது.

Play CopyWordByWord2:98

2:98 مَنْ كَانَ عَدُوًّا لِّلَّهِ وَمَلَائِكَتِهِ وَرُسُلِهِ وَجِبْرِيلَ وَمِيكَالَ فَإِنَّ اللَّهَ عَدُوٌّ لِّلْكَافِرِينَ

2:98. எவன் அல்லாஹ்வுக்கும், அவனுடைய மலக்குகளுக்கும், அவனுடைய தூதர்களுக்கும், ஜிப்ரீலுக்கும், மீக்காயிலுக்கும் பகைவனாக இருக்கிறானோ, நிச்சயமாக (அவ்வாறு நிராகரிக்கும்)




காஃபிர்களுக்கு அல்லாஹ் பகைவனாகவே இருக்கிறான்.

Play CopyWordByWord2:99

2:99 وما يكفر بها الا الفسقون ولقد انزلنا اليك ايت بينت

2:99. (நபியே!) நிச்சயமாக நாம் மிகத்தெளிவான வசனங்களை உம்மீது இறக்கிவைத்திருக்கிறோம்; பாவிகளைத் தவிர (வேறு எவரும்) அவற்றை நிராகரிக்க மாட்டார்கள்.

Play CopyWordByWord2:100

2:100 بل اكثرهم لا يؤمنون اوكلما عهدوا عهدا نبذه فريق منهم

2:100. மேலும், அவர்கள் உடன்படிக்கை செய்தபோதெல்லாம், அவர்களில் ஒரு பிரிவினர் அவற்றை முறித்து விடவில்லையா? ஆகவே, அவர்களில் பெரும்பாலோர் ஈமான் கொள்ள மாட்டார்கள்.

Play CopyWordByWord2:101

2:101 فريق من الذين اوتوا الكتب ولما جاءهم رسول من عند الله مصدق لما معهم نبذ
كتب الله وراء ظهورهم كانهم لا يعلمون

2:101. அவர்களிடம் உள்ள(வேதத்)தை மெய்ப்பிக்கும் ஒரு தூதர் அல்லாஹ்விடமிருந்து அவர்களிடம் வந்த போது, வேதம் வழங்கப்பட்டோரில் ஒரு பிரிவினர் அல்லாஹ்வின் வேதத்தைத் தாங்கள் ஏதும் அறியாதவர்கள்போல் தங்கள் முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டார்கள்.

Play CopyWordByWord2:102

2:102 وما كفر سليمن ولكن الشيطين كفروا واتبعوا ما تتلوا الشيطين على ملك سليمن
وما يعلمن من احد وما انزل على الملكين ببابل هروت وماروت [illegible] يعلمون الناس السحر
وما هم بضارين و زوجه فيتعلمون منهما ما يفرقون به بين المرء حتى يقولا انما نحن فتنة فلا تكفر
ولقد علموا لمن اشترىه ما ويتعلمون ما يضرهم ولا ينفعهم بضارين به من احد الا باذن الله
لو كانوا يعلمون انفسهم ولبئس ما شروا به انه [illegible] له في الاخرة من خلق




2:102. அவர்கள் ஸுலைமானின் ஆட்சிக்கு எதிராக ஷைத்தான்கள் ஓதியவற்றையே பின்பற்றினார்கள்; ஆனால் ஸுலைமான் ஒருபோதும் நிராகரித்தவர் அல்லர்; ஷைத்தான்கள் தாம் நிராகரிப்பவர்கள்; அவர்கள்தாம் மனிதர்களுக்குச் சூனியத்தைக் கற்றுக்கொடுத்தார்கள்; இன்னும், பாபில் (பாபிலோன் என்னும் ஊரில்) ஹாரூத், மாரூத் என்ற இரண்டு மலக்குகளுக்கு இறக்கப்பட்டதையும் (தவறான வழியில் பிரயோகிக்கக் கற்றுக்கொடுத்தார்கள்). ஆனால் அவர்கள் (மலக்குகள்) இருவரும் “நிச்சயமாக நாங்கள் சோதனையாக இருக்கிறோம் (இதைக் கற்று) நீங்கள் நிராகரிக்கும் காஃபிர்கள் ஆகிவிடாதீர்கள்” என்று சொல்லி எச்சரிக்காத வரையில், எவருக்கும் இ(ந்த சூனியத்)தைக் கற்றுக் கொடுக்கவில்லை; அப்படியிருந்தும் கணவன் - மனைவியிடையே பிரிவை உண்டாக்கும் செயலை அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். எனினும் அல்லாஹ்வின் கட்டளையின்றி அவர்கள் எவருக்கும் எத்தகைய தீங்கும் இதன் மூலம் இழைக்க முடியாது; தங்களுக்குத் தீங்கிழைப்பதையும், எந்த வித நன்மையும் தராததையுமே - கற்றுக் கொண்டார்கள். (சூனியத்தை) விலை கொடுத்து வாங்கிக் கொண்டவர்களுக்கு, மறுமையில் யாதொரு பாக்கியமும் இல்லை என்பதை அவர்கள் நன்கறிந்துள்ளார்கள். அவர்கள் தங்கள் ஆத்மாக்களை

தொடரும்.....

ஐந்தாண்டுகள் நிறைவடைந்த லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உறுப்பினர்களுக்கு கொரோனா கால ஊக்கத் தொகையாக பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகின்றது. பணம் பெற விருப்பம் உள்ள உறுப்பினர்கள் எனது அலைபேசியில் நேரடியாக என்னை தொடர்பு கொண்டு பணம் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்புடன் என்றும் உங்கள்

LORDS ம.பால்ராஜ்

சர்வதேச தலைமை சமூகசேவகர்

**LORDS CLUBS INTERNATIONAL**

(சர்வதேச மனிதக்கடவுள்கள் சங்கங்கள்)

Govt. Reg. No. : 1359/2013

+ 91 9840559673 | + 91 9790855633

e-Mail : lordsclubsinternational@gmail.com

Web : www.lordsclubs.com

லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டெர்நேஷனல் மூலமாக இந்தியா முழுவதும் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் ஆக்ஸிஜன் அதிகமாக வெளியிடும் அரசமரம், வேப்ப மரம், புங்க மரம் ஆகிய மூன்று மரங்களையும் பரவலாக வைத்து வருகின்றனர். லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டெர்நேஷனல் அனைத்து பகுதியில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் போர்க்கால அடிப்படையில் விரைந்து செயல்பட வேண்டும் என்று லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டெர்நேஷனல் நிறுவனரும் தலைவருமான சர்வதேச தலைமை சமூக சேவகர் ம.பால்ராஜ் அவர்கள் அன்புடன் வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டுள்ளார். மரச்செடிகள் தேவை எனும் லார்ட்ஸ் உறுப்பினர்கள் +91 9840559673 என்ற இவரது வாட்ஸ் அப் எண்ணிற்கு நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# இந்தியாவில் பொருளாதாரம் மேம்பட ரிவேஸ் இன்ஜினியரிங் சிஸ்டம் முறை வேண்டும்...

Lords ம.பால்ராஜ்

இந்தியாவில் தமிழகம் முழுவதும் கொரோனா தொற்று ஊரடங்கில் உண்ண உணவின்றி சாலையோரம் பசியுடன் வாழும் ஏழை எளியவர்களுக்கு தினமும் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டெர்நேஷனல் சார்பாக பல்வேறு கிளைகளின் உறுப்பினர்கள் மூலமாக மதிய உணவு மற்றும் குடிநீர் பாட்டில்கள் நாள் ஒன்றுக்கு மூன்று வேலையும் 1500 நபர்களுக்கு கொரோனா ஊரடங்கு தொடக்க நாள் முதல் இதுநாள் வரையில் தொடர்ந்து சென்னையில் பல்வேறு பகுதிகளில் அளித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக மதிய உணவாக 500 உணவு பொட்டலங்கள் மற்றும்500 குடிநீர் பாட்டில்கள் என சென்னை மியூசிக் அகாடமி மேம்பாலம் அருகில் துவங்கி ராயப்பேட்டை, பல்வேறு பகுதிக்கு 500 உணவு பார்சல்களும் 500 குடிநீர் பாட்டில்களும் வழங்கப்பட்டது. இச்சேவையை லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனரும் தலைவருமான சமூகசேவகர் ம.பால்ராஜ் அவர்கள் தலைமையில் நடைப்பெற்று வருகின்றது. இதனை தொடர்ந்து ம.பால்ராஜ் அவர்கள் ஊடகங்களுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியதாவது. பேரிடர் மீட்பு சமயங்களில் தொடர் களப்பணியாற்றும் எங்களின் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டெர்நேஷனல் தொண்டு நிறுவனத்திற்கு மத்திய, மாநில அரசு தரப்பிலிருந்து உதவி செய்து ஆதரிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். மேலும் அயல்நாட்டு தொண்டு நிறுவனங்களான லயன்ஸ் மற்றும் ரோட்டேரி நிறுவனங்கள் மூலமாக நாள் தோரும் நம் இந்திய பணம் டாலராக்கப்பட்டு சந்தாவாக அயல்நாடுகளுக்கு விரயமாகின்றது. இந்திய பொதுமக்களில் பலர் சுதந்திரத்திற்கு முன்பிலிருந்து இன்று வரையில் ஆங்கிலேயர்களுக்கு இதன் மூலமாக இன்னும் கப்பம் கட்டிவருவதால் நம் இந்தியாவிற்கு பொருளாதார இழப்பீடு மிகவும் அதிகமாக அடைந்து இந்திய பொருளாதாரம் நாளுக்கு நாள் மிகவும் பின்தங்கி இந்திய பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து வருவதாக வருத்தம்

தெரிவித்துள்ளார். மேலும் அனைத்து அயல்நாட்டு பொருட்களையும் இந்தியர்களாகிய நாம் அயல்நாட்டவர்களிடமிருந்து மொத்தமாக வாங்கி விற்பனை செய்து அயல்நாட்டவர்களுக்கு அதிக லாபம் ஈட்டி தருவது கூடாது.

இதை தவிர்த்து ஒரே ஒரு அயல்நாட்டு பொருளை மட்டும் தேர்வு செய்து அவர்களிடமிருந்து வாங்கி அந்த ஒரு பொருளை வைத்து அப்படியே அதேபோன்று ரிவேஸ் இன்ஜினியரிங் சிஸ்டம் முறைபடி ரீமேக் செய்து பல பொருட்களாக உருவாக்கி இந்திய தயாரிப்பாக நம் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு ஒட்டு மொத்த இந்தியர்களுக்கும் விற்பணை செய்தும் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் மட்டும்தான் நம் இந்தியர்களின் பொருளாதாரம் உயர்வடையும் என்றும் இதற்கு இந்தியாவில் உள்ள தொழிலதிபர்களும் இந்திய அரசும் ஒத்துழைப்பு தந்து செயல்படுத்தி இதை நிகழ்த்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார் சர்வதேச சமூகசேவகர் ம.பால்ராஜ் அவர்கள்.